# உள்ளூராட்சித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## பெறுகை அறிவித்தல்

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை மற்றும் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை வேலைத்திட்டங்களுக்கான விலைமனுக்கோரல்

## (PSDG & CBG)- 2018

தலைவர், திணைக்கள பெறுகைக்குழு சார்பில் உள்ளூராட்சித் திணைக்களம் வடக்கு மாகாணத்திற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகைமையுடைய வழங்குனர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரம் கோரப்படுகின்றது.

1. தேசிய போட்டி விலைக் கேள்விக்கான கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
2. விலைக் கேள்வியாளர்கள் நிர்மாணதொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், வீதிப் புனரமைப்பு மற்றும் கட்டிட வேலைக்கான பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை மட்டும் கொண்டதும் கறுப்புபட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும். தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரர்களின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
3. தேவையான தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி-V **(Schedule / Bidding Data & Contract Data)**இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
4. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் உள்ளூராட்சித் திணைக்களம், வடக்குமாகாணம். முதியோர் வளாகம்,யாழ் - கண்டி வீதி, கைதடி (**தொலைபேசி இலக்கம்:021-2213728 ,தொலைநகல்: 021-2215738, மின்னஞ்சல் (nplocalplan@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **உள்ளூராட்சித் திணைக்களம், வடக்கு மாகாணம். முதியோர் வளாகம், A-9 வீதி கைதடி, யாழ்ப்பாணம்** எனும் முகவரியிலிருந்து 04.05.2018ஆம் திகதியலிருந்து 25.05.2018 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் பிற்பகல் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா.2000.00 பணமாக செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
6. **விலைக் கேள்விகள் இருபிரதிகளில் (மூலம், பிரதி ) 25.05.2018 ஆம் திகதியன்று 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, உள்ளூராட்சித் திணைக்களம், வடக்கு மாகாணம், முதியோர் இல்ல வளாகம், A-9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாக திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
7. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், வடக்கு மாகாணம், முதியோர் இல்லவளாகம்,A-9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் **16.05.2018** ஆம் அன்று **14.30** மணிக்கு நடைபெறும்.
8. கேள்வியானது சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியிலிருந்து 77 நாட்கள் (10.08.2018) வரையும் செல்லுபடியாகும்.
9. கிடைக்கப்பெற்ற பெறுகைகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.
10. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்விஅடையாள இலக்கம் | வேலைவிபரம் | பெறுகைக்குழு | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தோகை (ரூபா) | தேவைப்படும் காலம் |
| **NP/08/MN/MWPS/PSDG/ W/2018/01** | விடத்தல் தீவு உள்ளக வீதி புனரமைப்பு- வட்டாரம் - 07 | திணைக்கள பெறுகைக்குழு | 15.00 | 3மாதம் | **C6** and **C5** | 150,000 | 07.09.2018 |
| **NP/08/JF/VWPS/PSDG/ W/2018/02** | அராலி தெற்கு காரைப்பிட்டி பிள்ளையார் கோவில் வீதி | திணைக்கள பெறுகைக்குழு | 12.00 | 3மாதம் | **C6** and **C5** | 120,000 | 07.09.2018 |
| **NP/08/JF/HO/CBG/ W/2018/01** | அலுவலக கேட்போர் கூடம் அமைத்தல். உள்ளூராட்சித் திணைக்களம், வடக்கு மாகாணம் | திணைக்கள பெறுகைக்குழு | 5.00 | 3மாதம் | **C8** | 50,000 | 07.09.2018 |

ம.பற்றிக் டிறஞ்சன்
தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு
உள்ளூராட்சித் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

திகதி :- 02.05.2018